# Isa

## Chapter 43

Tamil Interlinear

Reference: Tamil Indian Revised Version (IRV)

1

| Hebrew | Tamil | Strong's |
| --- | --- | --- |
| וְעַתָּה | இப்போது | H6258 |
| כֹּה־ | இவ்வாறு | H3541 |
| אָמַר | சொன்னார் | H0559 |
| יְהוָה | யெகோவா | H3068 |
| בֹּרַאֲךָ | உன்னை-சிருஷ்டித்தவர் | |
| יַעֲקֹב | யாக்கோபே | H3290 |
| וְיֹצֶרְךָ | உன்னை-உருவாக்கினவர் | H3335 |
| יִשְׂרָאֵל | இஸ்ரவேலே | H3478 |
| אַל־ | வேண்டாம் | H0408 |
| תִּירָא | பயப்படாதே | H3372 |
| כִּי | ஏனெனில் | |
| גְאַלְתִּיךָ | மீட்டேன்-உன்னை | |
| קָרָאתִי | அழைத்தேன் | H7121 |
| בְשִׁמְךָ | உன்-நாமத்தில் | H8034 |
| לִי־ | எனக்கு | |
| אָתָּה׃ | நீ | |

> இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய யெகோவா சொல்கிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பெயர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.

2

| Hebrew | Tamil | Strong's |
| --- | --- | --- |
| כִּי־ | ஏனெனில் | |
| תַעֲבֹר | கடக்கும்போது | |
| בַּמַּיִם | -தண்ணீர்களில் | H4325 |
| אִתְּךָ־ | உன்னோடு | H0854 |
| אָנִי | நான் | H0589 |
| וּבַנְּהָרוֹת | நதிகளிலும் | H5104 |
| לֹא | இல்லை | H3808 |
| יִשְׁטְפוּךָ | மூழ்கடிக்கும்-உன்னை | H7857 |
| כִּי־ | ஏனெனில் | |
| תֵלֵךְ | நடக்கும்போது | H3212 |
| בְּמוֹ־ | -வழியாக | H1119 |
| אֵשׁ | நெருப்பில் | H0784 |
| לֹא | இல்லை | H3808 |
| תִכָּוֶה | வெந்துபோவாய் | H3554 |
| וְלֶהָבָה | ஜ்வாலையும் | H3852 |
| לֹא | இல்லை | H3808 |
| תִבְעַר־ | எரியும் | |
| בָּךְ׃ | உன்னில் | |

> நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ நெருப்பில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; நெருப்புத்தழல் உன்னை சுட்டெரிக்காது.

3

| Hebrew | Tamil | Strong's |
| --- | --- | --- |
| כִּי | ஏனெனில் | |
| אֲנִי | நான் | H0589 |
| יְהוָה | யெகோவா | H3068 |
| אֱלֹהֶיךָ | உன்-தேவன் | H0430 |
| קְדוֹשׁ | பரிசுத்தர் | H6918 |
| יִשְׂרָאֵל | இஸ்ரவேலின் | H3478 |
| מוֹשִׁיעֶךָ | உன்-ரட்சகர் | H3467 |
| נָתַתִּי | கொடுத்தேன் | H5414 |
| כָפְרְךָ | உன்-மீட்பின்-கிரயமாக | |
| מִצְרַיִם | எகிப்தை | H4714 |
| כּוּשׁ | கூஷையும் | |
| וּסְבָא | செபாவையும் | H5434 |
| תַּחְתֶּיךָ׃ | உனக்கு-பதிலாக | H8478 |

> நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய யெகோவா; உன்னை மீட்கும்பொருளாக எகிப்தையும், உனக்கு ஈடாக எத்தியோப்பியாவையும் செபாவையும் கொடுத்தேன்.

4
מֵאֲשֶׁר ஏனெனில்
יָקַרְתָּ விலையுள்ளவனாயிருந்தாய் H3365
בְעֵינַי என்-கண்களில்
נִכְבַּדְתָּ மகிமைப்படுத்தப்பட்டாய் H3513
וַאֲנִי நான் H0589
אֲהַבְתִּיךָ நேசித்தேன்-உன்னை H0157
וְאֶתֵּן கொடுப்பேன் H5414
אָדָם மனிதர்களை H0120
תַּחְתֶּיךָ உனக்கு-பதிலாக H8478
וּלְאֻמִּים ஜாதிகளையும் H3816
תַּחַת -பதிலாக H8478
נַפְשֶׁךָ׃ உன்-ஆத்துமாவின் H5315

> நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனிதர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக மக்களையும் கொடுப்பேன்.

5
אַל־ வேண்டாம் H0408
תִּירָא பயப்படாதே H3372
כִּי ஏனெனில்
אִתְּךָ־ உன்னோடு H0854
אָנִי நான் H0589
מִמִּזְרָח கிழக்கிலிருந்து H4217
אָבִיא கொண்டுவருவேன் H0935
זַרְעֶךָ உன்-வித்தை H2233
וּמִמַּעֲרָב மேற்கிலிருந்தும் H4628
אֲקַבְּצֶךָּ׃ சேர்ப்பேன்-உன்னை H6908

> பயப்படாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்; நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரச்செய்து, உன்னை மேற்கிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பேன்.

6
אֹמַר சொல்வேன் H0559
לַצָּפוֹן வடக்குக்கு H6828
תֵּנִי கொடு H5414
וּלְתֵימָן தென்னுக்கும் H8486
אַל־ வேண்டாம் H0408
תִּכְלָאִי தடுக்காதே H3607
הָבִיאִי கொண்டுவா H0935
בָנַי என்-மகன்களை
מֵרָחוֹק தூரத்திலிருந்து H7350
וּבְנוֹתַי என்-மகள்களையும் H1323
מִקְצֵה எல்லையிலிருந்து
הָאָרֶץ׃ -பூமியின் H0776

> நான் வடக்கை நோக்கி: கொடு என்றும், தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் மகன்களையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் மகள்களையும்,

7
כֹּל எல்லா H3605
הַנִּקְרָא -அழைக்கப்பட்டவன் H7121
בִשְׁמִי என்-நாமத்தில் H8034
וְלִכְבוֹדִי என்-மகிமைக்கும் H3519
בְּרָאתִיו சிருஷ்டித்தேன்-அவனை
יְצַרְתִּיו உருவாக்கினேன்-அவனை H3335
אַף־ ஆம் H0637
עֲשִׂיתִיו׃ உண்டாக்கினேன்-அவனை

> நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் பெயர் சூட்டப்பட்ட அனைவரையும் கொண்டுவா என்பேன்.

8
הוֹצִיא வெளிக்கொணரு H3318
עַם־ ஜனத்தை
עִוֵּר குருடான H5787
וְעֵינַיִם கண்களும்
יֵשׁ உண்டு H3426
וְחֵרְשִׁים செவிடர்களும் H2795
וְאָזְנַיִם காதுகளும் H0241
לָמוֹ׃ அவர்களுக்கு

> கண்களிருந்தும் குருடர்களாயிருக்கிற மக்களையும், காதுகளிருந்தும் செவிடர்களாயிருக்கிறவர்களையும் புறப்பட்டு வரச்செய்யுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | כָּל־ | הַגּוֹיִ֞ם | נִקְבְּצ֣וּ | יַחְדָּ֗ו | וְיֵאָסְפוּ֙ | לְאֻמִּ֔ים | מִ֤י | בָהֶם֙ |
| | எல்லா | -ஜாதிகள் | சேர்ந்தார்கள் | ஒன்றாக | கூடினார்கள் | ஜாதிகள் | யார் | அவர்களில் |
| | H3605 | | H6908 | | H0622 | H3816 | H4310 | |

| | | | | |
|---|---|---|---|---|
| יַגִּ֣יד | זֹ֔את | וְרִאשֹׁנ֖וֹת | יַשְׁמִיעֻ֑נוּ | יִתְּנ֤וּ |
| அறிவிப்பான் | இதை | முந்தினவைகளையும் | கேட்கச்செய்யும் | கொடுக்கட்டும் |
| H5046 | H2063 | H7223 | H8085 | H5414 |

| | | | | |
|---|---|---|---|---|
| עֵדֵיהֶם֙ | וְיִצְדָּ֔קוּ | וְיִשְׁמְע֖וּ | וְיֹאמְר֥וּ | אֱמֶֽת׃ |
| அவர்கள்-சாட்சிகளை | நீதிமானாகட்டும் | கேட்டு | சொல்வார்கள் | உண்மை |
| H5707 | H6663 | H8085 | H0559 | H0571 |

> சகல தேசங்களும் ஏகமாகச் சேர்ந்துகொண்டு, சகல மக்களும் கூடிவரட்டும்; இதை அறிவித்து, முந்தி சம்பவிப்பவைகளை நமக்குத் தெரிவிக்கிறவன் யார்? கேட்டு உண்மையென்று சொல்லக்கூடும்படிக்கு, அவர்கள் தங்கள் சாட்சிகளைக் கொண்டுவந்து நேர்மையானவர்களாக விளங்கட்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | אַתֶּ֤ם | עֵדַי֙ | נְאֻם־ | יְהוָ֔ה | וְעַבְדִּ֖י | אֲשֶׁ֣ר |
| | நீங்கள் | என்-சாட்சிகள் | என்கிறார் | யெகோவா | என்-ஊழியக்காரனும் | நான் |
| | | H5707 | H5002 | H3068 | H5650 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| בָּחָ֑רְתִּי | לְמַ֣עַן | תֵּ֠דְעוּ | וְתַאֲמִ֨ינוּ | לִ֤י | וְתָבִ֙ינוּ֙ |
| தெரிந்துகொண்ட | -பொருட்டு | அறிவீர்கள் | விசுவாசிப்பீர்கள் | என்னில் | புரிந்துகொள்வீர்கள் |
| H0977 | H4616 | H3045 | H0539 | | H0995 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| כִּֽי־ | אֲנִ֣י | ה֔וּא | לְפָנַי֙ | לֹא־ | נ֣וֹצַר | אֵ֔ל | וְאַחֲרַ֖י |
| என்று | நான் | அவர் | எனக்கு-முன் | இல்லை | உருவாக்கப்பட்டது | தேவன் | எனக்கு-பின் |
| | H0589 | H1931 | H6440 | H3808 | H3335 | H0410 | |

| | | |
|---|---|---|
| לֹ֥א | יִהְיֶֽה׃ | ס |
| இல்லை | இருக்கும் | — |
| H3808 | H1961 | |

> நானே அவரென்று நீங்கள் உணர்ந்து என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் ஊழியக்காரனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று யெகோவா சொல்கிறார்; எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | אָנֹכִ֥י | אָנֹכִ֖י | יְהוָ֑ה | וְאֵ֥ין | מִבַּלְעָדַ֖י | מוֹשִֽׁיעַ׃ |
| | நான் | நான் | யெகோவா | இல்லை | என்னை-தவிர | ரட்சகர் |
| | H0595 | H0595 | H3068 | H0369 | H1107 | H3467 |

> நான், நானே யெகோவா; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | אָנֹכִ֞י | הִגַּ֤דְתִּי | וְהוֹשַׁ֙עְתִּי֙ | וְהִשְׁמַ֔עְתִּי | וְאֵ֥ין | בָּכֶ֖ם | זָ֑ר |
| | நான் | அறிவித்தேன் | ரட்சித்தேன் | கேட்கச்செய்தேன் | இல்லை | உங்களில் | அந்நியன் |
| | H0595 | H5046 | H3467 | H8085 | H0369 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וְאַתֶּ֧ם | עֵדַ֛י | נְאֻם־ | יְהוָ֖ה | וַאֲנִי־ | אֵֽל׃ |
| நீங்கள் | என்-சாட்சிகள் | என்கிறார் | யெகோவா | நானே | தேவன் |
| | H5707 | H5002 | H3068 | H0589 | H0410 |

> நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கச்செய்தேன்; உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன் இல்லை; நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று யெகோவா சொல்கிறார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | גַּם־ | מִיּוֹם֙ | אֲנִ֣י | ה֔וּא | וְאֵ֥ין | מִיָּדִ֖י | מַצִּ֑יל |
| | ஆம் | -நாளிலிருந்து | நான் | அவர் | இல்லை | என்-கையிலிருந்து | விடுவிக்கிறவன் |
| | H1571 | H3117 | H0589 | H1931 | H0369 | H3027 | H5337 |

| | | | |
|---|---|---|---|
| אֶפְעַ֖ל | וּמִ֥י | יְשִׁיבֶֽנָּה׃ | ס |
| செய்வேன் | யார் | திருப்பிச்செய்வான்-அதை | — |
| H6466 | H4310 | H7725 | |

> நாள் உண்டாகாததற்குமுன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?

14
כֹּה־ இவ்வாறு H3541
אָמַר சொன்னார் H0559
יְהוָה யெகோவா H3068
גֹּאַלְכֶם உங்கள்-மீட்பர்
קְדוֹשׁ பரிசுத்தர் H6918
יִשְׂרָאֵל இஸ்ரவேலின் H3478
לְמַעַנְכֶם உங்கள்-நிமித்தம் H4616
שִׁלַּחְתִּי அனுப்பினேன் H7971
בָבֶלָה பாபிலோனுக்கு H0894
וְהוֹרַדְתִּי இறக்கினேன் H3381
בָרִיחִים தாழ்ப்பாள்களாக H1281
כֻלָּם எல்லாரையும் H3605
וְכַשְׂדִּים கல்தேயரையும் H3778
בָּאֳנִיּוֹת கப்பல்களில் H0591
רִנָּתָם׃ அவர்கள்-கூக்குரல் H7440

நான் உங்களுக்காக அரண்களெல்லாம் இடிந்துவிழவும், கல்தேயர்கள் படகுகளிலிருந்து அலறவும் செய்யத்தக்கவர்களைப் பாபிலோனுக்கு அனுப்பினேனென்று, உங்கள் மீட்பரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய யெகோவா சொல்கிறார்.

15
אֲנִי நான் H0589
יְהוָה யெகோவா H3068
קְדוֹשְׁכֶם உங்கள்-பரிசுத்தர் H6918
בּוֹרֵא சிருஷ்டிகர்
יִשְׂרָאֵל இஸ்ரவேலின் H3478
מַלְכְּכֶם׃ உங்கள்-ராஜா H4428
ס —

நானே உங்கள் பரிசுத்தராகிய யெகோவாவும், இஸ்ரவேலின் சிருஷ்டிகரும், உங்கள் ராஜாவுமானவர்.

16
כֹּה இவ்வாறு H3541
אָמַר சொன்னார் H0559
יְהוָה யெகோவா H3068
הַנּוֹתֵן -கொடுக்கிறவர் H5414
בַּיָּם கடலிலே H3220
דָּרֶךְ வழியை H1870
וּבְמַיִם -பலத்த H4325
עַזִּים தண்ணீர்களிலும் H5794
נְתִיבָה׃ பாதையை

கடலிலே வழியையும் திரளான தண்ணீர்களிலே பாதையையும் உண்டாக்கி,

17
הַמּוֹצִיא வெளிக்கொணருகிறவர் H3318
רֶכֶב־ தேர் H7393
וָסוּס குதிரையும்
חַיִל சேனையை H2428
וְעִזּוּז பலத்தையும் H5808
יַחְדָּו ஒன்றாக
יִשְׁכְּבוּ சாய்வார்கள் H7901
בַּל־ இல்லை H1077
יָקוּמוּ எழுவார்கள்
דָּעֲכוּ அணைந்தார்கள் H1846
כַּפִּשְׁתָּה திரியைப்போல H6594
כָבוּ׃ அணைந்தார்கள் H3518

இரதங்களையும் குதிரைகளையும் படைகளையும் பராக்கிரமசாலிகளையும் புறப்படச்செய்து, அவைகள் எழுந்திராதபடிக்கு ஒருமித்து விழுந்துகிடக்கவும், ஒரு திரி அணைகிறதுபோல் அவைகள் அணைந்துபோகவும்செய்கிற யெகோவா சொல்கிறதாவது:

18
אַל־ வேண்டாம் H0408
תִּזְכְּרוּ நினைவுகொள்ளுங்கள் H2142
רִאשֹׁנוֹת முந்தினவைகளை H7223
וְקַדְמֹנִיּוֹת பழையவைகளையும் H6931
אַל־ வேண்டாம் H0408
תִּתְבֹּנָנוּ׃ சிந்திக்குங்கள் H0995

முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; முந்தினமானவைகளைச் சிந்திக்கவேண்டாம்.

19
הִנְנִי இதோ H2009
עֹשֶׂה செய்கிறேன்
חֲדָשָׁה புதியதை H2319
עַתָּה இப்போது H6258
תִצְמָח முளைக்கும் H6779
הֲלוֹא அல்லவா H3808
תֵדָעוּהָ அறிவீர்களா-அதை H3045
אַף ஆம் H0637
אָשִׂים ஆக்குவேன்
בַּמִּדְבָּר வனாந்தரத்தில்
דֶּרֶךְ வழியை H1870
בִּישִׁמוֹן பாழவனத்தில் H3452
נְהָרוֹת׃ நதிகளை H5104

இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்திரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.

20

| תְּכַבְּדֵנִי | חַיַּת | הַשָּׂדֶה | תַּנִּים | וּבְנוֹת |
| --- | --- | --- | --- | --- |
| மகிமைப்படுத்தும்-என்னை | ஜீவன்கள் | வயலின் | நரிகளும் | மகள்களும் |
| H3513 | | | | H1323 |

| יַעֲנָה | כִּי־ | נָתַתִּי | בַמִּדְבָּר | מַיִם | נְהָרוֹת |
| --- | --- | --- | --- | --- | --- |
| தீக்குப்பறவையின் | ஏனெனில் | கொடுத்தேன் | வனாந்தரத்தில் | தண்ணீரை | நதிகளை |
| H3284 | | H5414 | | H4325 | H5104 |

| בִּישִׁימֹן | לְהַשְׁקוֹת | עַמִּי | בְחִירִי׃ |
| --- | --- | --- | --- |
| பாழவனத்தில் | குடிக்கொடுக்க | என்-ஜனத்தை | என்-தெரிந்துகொள்ளப்பட்டவனை |
| H3452 | H8248 | | H0972 |

நான் தெரிந்துகொண்ட என் மக்களின் தாகத்திற்கு வனாந்திரத்திலே தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால், காட்டுமிருகங்களும், வலுசர்ப்பங்களும், ஆந்தைக் குஞ்சுகளும் என்னைக் கனப்படுத்தும்.

21

| עַם־ | זוּ | יָצַרְתִּי | לִי | תְּהִלָּתִי | יְסַפֵּרוּ׃ | ס |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| ஜனத்தை | இதை | உருவாக்கினேன் | எனக்கு | என்-துதியை | சொல்வார்கள் | — |
| | H2098 | H3335 | | H8416 | | |

இந்த மக்களை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்.

22

| וְלֹא־ | אֹתִי | קָרָאתָ | יַעֲקֹב | כִּי־ | יָגַעְתָּ | בִּי |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| இல்லை | என்னை | அழைத்தாய் | யாக்கோபே | ஏனெனில் | அலுத்தாய் | என்னில் |
| H3808 | H0853 | H7121 | H3290 | | H3021 | |

| יִשְׂרָאֵל׃ |
| --- |
| இஸ்ரவேலே |
| H3478 |

ஆனாலும் யாக்கோபே, நீ என்னை நோக்கிக் கூப்பிடவில்லை; இஸ்ரவேலே, நீ என்னைக்குறித்து மனம்சலித்துப்போனாய்.

23

| לֹא־ | הֵבֵיאתָ | לִּי | שֵׂה | עֹלֹתֶיךָ |
| --- | --- | --- | --- | --- |
| இல்லை | கொண்டுவந்தாய் | எனக்கு | ஆட்டை | உன்-சர்வாங்கபலிகளின் |
| H3808 | H0935 | | H7716 | |

| וּזְבָחֶיךָ | לֹא | כִבַּדְתָּנִי | לֹא |
| --- | --- | --- | --- |
| உன்-பலிகளையும் | இல்லை | மகிமைப்படுத்தினாய்-என்னை | இல்லை |
| H2077 | H3808 | H3513 | H3808 |

| הֶעֱבַדְתִּיךָ | בְּמִנְחָה | וְלֹא | הוֹגַעְתִּיךָ |
| --- | --- | --- | --- |
| அடிமைப்படுத்தினேன்-உன்னை | -காணிக்கையில் | இல்லை | சையாக்கினேன்-உன்னை |
| H5647 | H4503 | H3808 | H3021 |

| בִּלְבוֹנָה׃ |
| --- |
| சாம்பிராணியால் |
| H3828 |

உன் ஆடுகளைத் தகனபலிகளாக நீ எனக்குச் செலுத்தவில்லை; உன் பலிகளாலே நீ என்னைக் கனப்படுத்தவுமில்லை; காணிக்கைகளைச் செலுத்தும்படி நான் உன்னைச் சங்கடப்படுத்தாமலும், தூபங்காட்டும்படி உன்னை வருத்தப்படுத்தாமலும் இருந்தேன்.

24
לֹא־ இல்லை H3808
קָנִיתָ வாங்கினாய் H7069
לִּי எனக்கு
בַכֶּסֶף வெள்ளியால் H3701
קָנֶה நாணலை H7070
וְחֵלֶב கொழுப்பையும் H2459

זְבָחֶיךָ உன்-பலிகளின் H2077
לֹא இல்லை H3808
הִרְוִיתָנִי திருப்தியடையச்செய்தாய்-என்னை H7301
אַךְ ஆனால் H0389

הֶעֱבַדְתַּנִי அடிமைப்படுத்தினாய்-என்னை H5647
בְּחַטֹּאותֶיךָ உன்-பாவங்களால்
הוֹגַעְתַּנִי சையாக்கினாய்-என்னை H3021

בַּעֲוֺנֹתֶיךָ׃ உன்-அக்கிரமங்களால் H5771
ס —

> நீ எனக்குப் பணங்களால் சுகந்தப்பட்டையைக் கொள்ளாமலும், உன் பலிகளின் கொழுப்பினால் என்னைத் திருப்தியாக்காமலும், உன் பாவங்களினால் என்னைச் சங்கடப்படுத்தி, உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய்.

25
אָנֹכִי நான் H0595
אָנֹכִי நான் H0595
הוּא அவர் H1931
מֹחֶה அழிக்கிறவர்
פְשָׁעֶיךָ உன்-மீறுதல்களை H6588
לְמַעֲנִי என்-நிமித்தமாக H4616

וְחַטֹּאתֶיךָ உன்-பாவங்களையும்
לֹא இல்லை H3808
אֶזְכֹּר׃ நினைவுகொள்வேன் H2142

> நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினைக்காமலும் இருப்பேன்.

26
הַזְכִּירֵנִי நினைவுபடுத்து-என்னை H2142
נִשָּׁפְטָה நியாயத்தீர்ப்பு-பெறுவோம் H8199
יָחַד ஒன்றாக
סַפֵּר சொல்
אַתָּה நீ
לְמַעַן -பொருட்டு H4616

תִּצְדָּק׃ நீதிமானாகுவாய் H6663

> நாம் ஒருவரோடொருவர் வழக்காடும்படி எனக்கு நினைப்பூட்டு; நீ நீதிமானாக விளங்கும்படி உன் காரியத்தைச் சொல்.

27
אָבִיךָ உன்-தகப்பன் H0001
הָרִאשׁוֹן முதல்வன் H7223
חָטָא பாவம்செய்தான் H2398
וּמְלִיצֶיךָ உன்-மத்தியஸ்தர்களும் H3887
פָּשְׁעוּ மீறினார்கள் H6586

בִי׃ எனக்கு-விரோதமாக

> உன் ஆதிதகப்பன் பாவம்செய்தான்; உனக்கு முன்னின்று பேசுகிறவர்களும் எனக்கு விரோதமாகத் துரோகம்செய்தார்கள்.

28
וַאֲחַלֵּל அபவித்ரப்படுத்தினேன்
שָׂרֵי பிரபுக்களை H8269
קֹדֶשׁ பரிசுத்தத்தின் H6944
וְאֶתְּנָה கொடுத்தேன் H5414
לַחֵרֶם அழிவுக்கு

יַעֲקֹב யாக்கோபை H3290
וְיִשְׂרָאֵל இஸ்ரவேலையும் H3478
לְגִדּוּפִים׃ நிந்தைகளுக்கு H1421
ס —

> ஆகையால், நான் பரிசுத்த ஸ்தலத்தின் தலைவர்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, யாக்கோபைச் சாபத்திற்கும், இஸ்ரவேலை நிந்தனைக்கும் ஒப்புக்கொடுப்பேன்.